# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை 22 செவ்வாய்க்கிழமை 04.02.2025 கதிர் 117



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

யாழ் முற்றம்

Yarl Muttram

Youtube Channel




## "இன்று தமிழர் தாயகத்தின் கரிநாள்" எனப் பிரகடனப்படுத்தி

# கிளிநொச்சியில் மாபெரும் போராட்டம்




கிளிநொச்சி, பெப் 04

இலங்கையின் சுதந்திர நாளான இன்று "தமிழர் தாயகத்தின் கரிநாள்" எனப் பிரகடனப்படுத்தி வடக்கு - கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழினப் படுகொலைக்கு நீதி கோரியும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி கோரியும், அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் கிளிநொச்சியில் மாபெரும் கறுப்புக் கொடி போராட்டம் நடைபெற்றது.

7➤

## திலீபனின் தூபிக்கு முன்பாகப் போராட்டம்



யாழ்ப்பாணம், பெப் 04

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று யாழ்ப்பாணத்தில் கறுப்புக் கொடி போராட்டம் நடைபெற்றது.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத்

7➤

## யாழ். பல்கலைக்கழகத்தில் இறக்கப்பட்ட தேசியக் கொடி

### கறுப்புக் கொடியேற்றி மாணவர்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், பெப் 04

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பிரதான கொடிக்கம்பத்தில் பறந்த தேசியக் கொடி மாணவர்களால் இன்று இறக்கப்பட்டு கறுப்புக் கொடியேற்றப்பட்டது. அதேவேளை, பல்கலைக்கழகச் சூழலில் கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன.

7➤

# முறைப்பாடுகளை ஏற்க மறுக்கும் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை



கொழும்பு, பெப் 04

பொதுமக்கள் முறைப்பாடு அளிக்க பொலிஸ் நிலையங்களுக்கு வரும் தரப்பினரிடமிருந்து முறைப்பாடுகளை ஏற்க மறுக்கும் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்

ஒழுக்காற்று நடவடிக்கைக்கு மேலதிகமாக, பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் விதிகளின்படி அத்தகைய அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பும் உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு அளிக்க வருபவர்களின் முறைப்பாடுகளை ஏற்காமல், பல்வேறு காரணங்களைக் கூறி நிராகரிக்கப்படுவதாக எழுத்துப்பூர்வமாகவும், வாய்மொழியாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பிரியந்த வீரசூரிய குறிப்பிட்டுள்ளார். பொலிஸ் நிலையப் பொறுப்பாளர்களும் பிற அதிகாரிகளும் இத்தகைய மறுப்புக்கு பல்வேறு காரணங்களை முன்வைப்பதாக தகவல்கள் வந்துள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் தனது சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பொலிஸ் நிலையங்களுக்குப் பதிவாகும் முறைப்பாடுகளை பதிவுசெய்து விசாரணை செய்வது பொலிஸ் அதிகாரிகளின் கடமையும் பொறுப்பும் ஆகும் என்றும் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய வலியுறுத்தியுள்ளார்.

எனவே பொலிஸ் நிலையங்களுக்கு கிடைக்கும் எந்தவொரு முறைப்பாட்டையும் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்க முடியாது என்று பதில் பொலிஸ்மா அதிபர் வெளியிட்ட சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளது. (ஐ)

## மட்டக்களபில் 16 கைதிகள் விடுதலை



மட்டக்களப்பு, பெப் 04

இலங்கையின் 77வது தேசிய சுதந்திர தினத்தினை முன்னிட்டு ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக மட்டக்களப்பு சிறையிலிருந்து 16 கைதிகள் இன்று (04) திகதி விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் தலைமையில் சிறு குற்றங்கள் புரிந்ததன் அடிப்படையில் தண்டனை பெற்றுவந்த கைதிகள் 16 பேர் பொதுமன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டதாக சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார். (ஐ)

## இலங்கையில் தேங்காய் சார் உற்பத்தி அதிகரித்த வருமானம்



கொழும்பு, பெப் 04

இலங்கையின் தேங்காய் உற்பத்தி தொழிற்துறையானது தற்போது 2.5 பில்லியன் அமெரிக்க டொலரை பெறக்கூடிய ஆற்றலை கொண்டுள்ளதாகவும் அதன் தற்போதைய மதிப்பு தோராயமாக 850 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து அதிகரித்துள்ளதாகவும் தேங்காய் பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் ரந்தீவ மலாலசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்வருடத்திற்கான தேங்காய் உற்பத்தியை 4.5 பில்லியனாக அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாகவும் இலங்கை தேங்காய்களின் மதிப்பு கூட்டப்பட்ட பிறகு மறு ஏற்றுமதிக்காக குறைந்த மதிப்புள்ள தேங்காய் உற்பத்தி பொருட்களை இறக்குமதி செய்வதிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தேங்காய்கள் வீணாவதைக் குறைக்க, பதப்படுத்தப்பட்ட தேங்காய் உற்பத்தி பொருட்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று மலாலசூரிய எடுத்துரைத்தார். உலகலாவிய ரீதியில் இலங்கை நான்காவது பெரிய தேங்காய் உற்பத்தியாளராக காணப்படுகின்றது.

உலகளாவிய சந்தையைக் கருத்தில் கொண்டு, இலங்கை தனது தேங்காய் உற்பத்தி பொருட்களை சர்வதேச அளவில் கொண்டு செல்ல அதிக வாய்ப்பு உள்ளது என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேங்காய் உற்பத்தியில் 2.5 பில்லியன் அமெரிக்க டொலரை பெற்றுக்கொள்ள குறைந்த பட்சம் 4.5 பில்லியன் தேங்காய்களை உற்பத்தி செய்யக்கூடிய தேவை காணப்படுவதாகவும், இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலிருந்து குறைந்த மதிப்புள்ள புதிய தேங்காய்களை இறக்குமதி செய்து மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி மறு ஏற்றுமதி செய்ய முடியும் எனவும் அவர் இதன் போது தெரிவித்துள்ளார். (ஐ)

## பியூமி ஹன்சமாலக்கு நீதிமன்றம் விடுத்த உத்தரவு

*கொழும்பு, பெப் 04*

*இலங்கை நடிகையும், மொடலுமான பியூமி ஹன்சமாலி மற்றும் பிரபல வர்த்தகர் விரஞ்சித்தம்புகல ஆகியோருக்கு எதிரான சட்டவிரோதமாக சொத்து குவிப்பு வழக்கு அறிக்கை வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதி சமர்ப்பிக்க கொழும்பு மேல்நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.*

*குறித்த இருவர் மீதான விசாரணைகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கையை எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கொழும்பு மேலதிக நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.*

*உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 190ஆம் பிரிவின் கீழ், பியூமி ஹன்சமாலி மற்றும் விரஞ்சித் தம்புகல ஆகியோர் சட்டவிரோதமாக சொத்துக்களைச் சம்பாதித்துள்ளார்களா என்பது தொடர்பில் விசாரணைகளை நடத்த உத்தரவு பிறப்பிக்குமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.*

*இந்த வழக்கு நேற்றைய தினம மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் போது, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி குறித்த வழக்கு தொடர்பில் உரிய ஆவணங்களைச் சரிபார்ப்பதற்காக பியூமி ஹன்சமாலி மற்றும் விரஞ்சித் தம்புகல ஆகியோரின் வீடுகளைச் சோதனையிட்ட போது இருவரும் அவர்களது வீட்டில் இருக்கவில்லை என நீதிமன்றில் தெரிவித்தார்.*

*இதனை கருத்தில் கொண்ட நீதவான் வழக்கு தொடர்பான முன்னேற்ற அறிக்கையை எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார். (ஐ)*

## 6 லட்சம் ரூபாவால் அதிகரிக்கும் வாகனங்கள்



கொழும்பு, பெப் 04

புதிய வரி திருத்திற்கமைய, முச்சக்கர வண்டி மற்றும் உந்துருளிகளை அதிக விலைக்கு விற்பனை செய்ய வேண்டியேற்படும் என வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சிலோன் மோட்டர் டிரேடர்ஸ் ஒழுங்கமைப்பின் தலைவர் என்ரூ பெரேரா இதனைத் தெரிவிததுள்ளார்.

இதன்படி 3 லட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட உந்துருளி ஒன்று இறக்குமதி தடை தளர்த்தப்பட்டதுடன் விதிக்கப்பட்ட வரி காரணமாக 7 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கும் என குறிப்பிட்டார்.

அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட முச்சக்கர வண்டி ஆறரை இலட்சம் ரூபாவால் அதிகரிக்கக் கூடும். அதேநேரம், இரண்டு அல்லது 3 மில்லியன் ரூபாய்களுக்கு இருந்த வாகனங்கள், 7 மில்லியன் ரூபாய் வரைக்கும் அதிகரித்துள்ளது. இறக்குமதி தடை நீக்கப்பட்டதன் பின்னர் பல்வேறு வகையான வரிகள் அமுலாக்கப்படுகின்றன.

இதன் காரணமாக வாகனங்களின் விலைகள் 160 முதல் 260 சதவீதம் வரையில் அதிகரிப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் தற்போதைய நிலையில் வாகனங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாகப் பொதுமக்கள் தங்களது நிதி நிலைமைகளைக் கருத்திற் கொண்டே தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வரி அதிகரிப்பானது தற்போதைக்கு குறைக்கப்படாது என்று அரசாங்கம் தங்களிடம் தெரிவித்திருப்பதாகவும் சிலோன் மோட்டர் டிரேடர்ஸ் ஒழுங்கமைப்பின் தலைவர் என்ரூ பெரேரா கூறியுள்ளார்.

நாட்டிற்கு புதிய மகிழுந்து, முச்சக்கர வண்டி, உந்துருளி, பாரவூர்தி, பேருந்து ஆகியவற்றை இறக்குமதி செய்யும் டொயோட்டோ லங்கா, ஸ்டேன்டர்ஸ் மோட்டர்ஸ், யுனைட்டட் மோட்டர்ஸ், கியா மோட்டர்ஸ், டி.வி.எஸ் லங்கா, லங்கா அசோக் லேலண்ட், டேவிட் பீரிஸ் ஆகிய 24 நிறுவனங்கள் சிலோன் மோட்டர் டிரேடர்ஸ் ஒழுங்கமைப்பிற்குள் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அனைத்து இனத்தவர்களும் இணைந்து செயற்பட வேண்டும்



கொழும்பு, பெப் 04

சுதந்திரத்தை முழுமையாக வென்றெடுப்பதற்கான போராட்டத்தில் நாட்டின் அனைத்து இனத்தவர்களும் இணைந்து செயற்பட வேண்டிய தேவை உள்ளதாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

சுதந்திர சதுக்கத்தில் இன்று காலை இடம்பெற்ற நாட்டின் 77ஆவது சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை பாதுகாத்து வளமானதாக மாற்றுவதற்கான பொறுப்பு உணவு உற்பத்தி செய்யும் விவசாயி முதல் நாட்டை காக்கும் முப்படையினர் வரை அனைவருக்கும் உள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் சகல தொழிற்துறையினரும் இதில் பங்குதாரர்களாக உள்ளனர் எனவும் நாட்டை பொருளாதார ரீதியில் சுதந்திரமானதாக மாற்றுவதற்கு இந்த நாட்டின் சகல பிரஜைகளும் ஒன்றிணைய வேண்டும் என்றும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார. (ஐ)

## அரசியலமைப்பு விரைவில் ரத்து செய்யப்பட வேண்டும்



கொழும்பு, பெப் 04

இலங்கை மக்களுக்கு உண்மையான சுதந்திரத்தைக் கொண்டுவரும் பரந்த அரசியல், பொருளாதார மற்றும் சட்ட சீர்திருத்தங்களுக்கு கொழும்பு பேராயர் கார்டினல் மால்க்லம் ரஞ்சித் இன்று அழைப்பு விடுத்தார்.

77வது சுதந்திர தினத்தைக் குறிக்கும் சிறப்பு வழிபாட்டின் போது பேசிய கர்தினால் ரஞ்சித், புதிய அரசியலமைப்பு, நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் ரத்து செய்தல் மற்றும் அதிகாரம் சலுகைகளை அனுபவிப்பதை விட மக்களுக்கு சேவை செய்ய அரச தலைவரை வழிநடத்தும் புதிய சட்டத்தை இயற்ற வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

“தற்போதைய அரசியலமைப்பு விரைவில் ரத்து செய்யப்பட வேண்டும், மேலும் அதிகாரம் மற்றும் சலுகைகளை அனுபவிக்காமல் தேசத்திற்கு சேவை செய்ய தேசத் தலைவரை சட்டப்பூர்வமாகக் கடமைப்படுத்தும் ஒரு புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்,” என்று அவர் கூறினார். (ஐ)

## கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்துக்கு ஜப்பான் நிதியுதவி



கொழும்பு, பெப் 04

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையின் கழிவு முகாமைத்துவ கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ஜப்பான் 565 மில்லியன் ரூபாய் நிதியுதவி வழங்கியுள்ளது.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் இடம்பெற்றது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஜப்பானின் வெளிவிவகார நடவடிக்கை தொடர்பான நாடாளுமன்ற உப அமைச்சர் சயமா அகிகோ மற்றும் நிதியமைச்சன் செயலாளர் மகிந்த சிறிவர்த்தன ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர். (ஐ)

## இலங்கை தேசத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்



கொழும்பு, பெப் 04

‘சுதந்திரம்’ என்பது தேசத்தின் இறைமை மட்டுமன்று. அது கண்ணியம், நீதி மற்றும் ஒடுக்குமுறை இல்லாத வாழ்வுகளாக அனைவருக்கும் உள்ள உரிமையை உறுதிப்படுத்துவதாகும்.

இனம், மதம், சாதி, பாலினம் அல்லது வர்க்கம் என்ற பேதமின்றி அனைத்து சமூகங்களும் இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்பதற்கு சமமான வாய்ப்புகள் கிடைக்கின்ற, அனைவருக்கும் உரிய மதிப்பும் பெறுமானமும் கிடைக்கின்ற ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதன் மூலமே உண்மையான சுதந்திரம் சாத்தியமாகும் என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

‘வளமான நாடு, அழகான வாழ்க்கை’ என்பது வெறுமனே ஒரு எண்ணக்கரு மட்டுமன்று. அது செயற்பாட்டுக்கான ஒரு அழைப்பு. அது ஆழமான ஜனநாயகம் மற்றும் பொருளாதார நீதிக்கு முன்னுரிமை அளிக்கும் எண்ணக்கருவாகும். விளிம்பு நிலை சமூகங்களின் குரல்கள் தன்னெழுச்சியாக வெளிப்படுவதில்லை. அந்தக் குரல்கள் எழுகின்ற வகையில் தீர்மானங்களை மேற்கொள்வதில் அனைவரையும் பங்கேற்கச் செய்யும் ஒரு முறைமையுடன் இலங்கை தேசம் கட்டியெழுப்பப்பட வேண்டும். அது அனைவருடையவும் உரிமைகள் பாதுகாக்கப்பட்ட மற்றும் பெறுமதியை உணரும் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான உறுதிமொழியாகும்.

இந்த வரலாற்று முக்கியத்துவ மிக்க நாளில், நாம் அடையாளக் கொண்டாட்டங்களுக்கு அப்பால் சென்று ஒரு அர்த்தமுள்ள மாற்றத்திற்காக - உண்மையிலேயே அனைவருக்கும் உரித்தான இலங்கை தேசத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

## பொலிஸ் மா அதிபரின் விசேட சுற்றறிக்கை



கொழும்பு, பெப் 04

முறைப்பாடு அளிக்க பொலிஸ் நிலையங்களுக்கு வருகை கரும் தரப்பினரிடமிருந்து முறைப்பாடுகளை ஏற்க மறுக்கும் அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, ஒழுக்காற்று நடவடிக்கைக்கு மேலதிகமாக, பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் விதிகளின்படி அத்தகைய அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு அளிக்க வருகை தரும் தரப்பினரிடம், முறைப்பாடுகளை ஏற்காமல், பல்வேறு காரணங்களைக் கூறி நிராகரிக்கப்படுவதாக எழுத்துப்பூர்வமாகவும், வாய்மொழியாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது.

பொலிஸ் நிலையப் பொறுப்பாளர்களும் பிற அதிகாரிகளும் இத்தகைய மறுப்புக்கு பல்வேறு காரணங்களை முன்வைப்பதாக தகவல்கள் வந்துள்ளது.

பொலிஸ் நிலையங்களுக்குப் பதிவாகும் முறைப்பாடுகளை பதிவு செய்து விசாரணை செய்வது பொலிஸ் அதிகாரிகளின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

அதன்படி, இனிமேல், பொலிஸ் நிலையங்களுக்கு கிடைக்கும் எந்தவொரு முறைப்பாட்டையும் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்க முடியாது என்றும் பதில் பொலிஸ் மா அதிபர் வெளியிட்ட சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## வரலாறு தெரியவில்லை என்றால் வாயை மூடி இருக்கவும்!

யாழ்ப்பாணம், பெப் 04

யாழ்ப்பாணத்தில் அண்மையில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான முரணான நிறைய விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளர் கனகரட்ணம் சுகாஸ் கடுமையாக சாடியுள்ளார்.

யாழ் மாவட்ட மக்களின் வாக்குகளை பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவான சில உறுப்பினர்கள், தமிழ் மக்களுக்கு எதிராக மிகவும் மோசமான செயலை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியிள்ளார்.

வரலாறு தெரியவில்லை என்றால் அமைதியாக இருங்கள் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும் எனவும் மற்றும் தையிட்டி விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகளுக்கு பதிலாக மக்களுக்கு மாற்று காணிகளை வழங்க வேண்டும் எனவும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தில் தெரிவித்ததாகவும் சுகாஸ் கூறியுள்ளார்.

இந்தநிலையில், இவர்களின் இவ்வாறான செயற்பாடு கள் குறித்து மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் அத்தோடு, இவர்கள் அரசின் இரகசிய முகவர்களாக செயற்பட்டு எஞ்சியுள்ள தமிழ் தேசியத்தையும், தமிழனத்தின் நலன்களையும் அழிக்க முற்படுகின்றதாகவும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் வரலாறு தெரியவில்லை என்றால் அமைதியாக இருங்கள், தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமே தவிர்த்து நட்ட ஈடு அல்ல என்பதை நாங்கள் தெரிவித்து கொள்ள விரும்புகின்றோம் எனவும் சுகாஸ் தெரிவித்துள்ளார்.

அதேவேளை யாழ் மாவட்ட சுயேட்சைக்குழு நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனாவே நட்டஈடு பற்றி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மும்பை விமான நிலையத்தில் ரூ.50 கோடி பெறுமதியான கஞ்சா மீட்பு!



மும்பை விமான நிலையத்தில் ரூ.50 கோடி பெறுமதியான உயர் ரக கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.


கடந்த மாதம் 28-ஆம் திகதி முதல் 31-ஆம் திகதி வரையிலான 4 நாட்களில் சுங்கத்துறையினரால் இந்த சிறப்பு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

வெளிநாடுகளில் இருந்து மும்பைக்கு அதிகளவில் தங்கம், போதைப்பொருள் விமானம் மூலம் கடத்தி வரப்படுகிறது. இதை தடுக்க சுங்கத்துறையினர் விமான நிலையங்களில் பயணிகளிடம் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்த சோதனையின் போது இருவேறு சம்பவங்களில் தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இருந்து வந்த விமானத்தில் கடத்தி வரப்பட்ட ரூ.50 கோடி மதிப்பிலான உயர் ரக கஞ்சாவை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். மேலும் கஞ்சாவை கடத்தி வந்த 5 பயணிகளையும் கைது செய்தனர்.

இதேபோல ரியாத், மஸ்கட், துபாயில் இருந்து கடத்தி வரப்பட்ட ரூ.93.8 இலட்சம் வைரம், ரூ.1 கோடி தங்கமும் பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக அதிகாரிகள் 3 பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு டெல்லியில் பெப்ரவரி 5ஆம் திகதி பொது விடுமுறை!




சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு டெல்லியில் பெப்ரவரி 5ஆம் திகதி பொது விடுமுறையாக் அறிவிக்கப் படவுள்ளதாக டெல்லி அரசு உத்தரவிட்டுள்ளது.

டெல்லி மாநில தேர்தலுக்கான தேர்தல் பிரச்சாரம் நேற்று மாலையுடன் நிறைவடைந்த நிலையில் நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறவிருக்கின்றது.

ஆம் ஆத்மி, பாஜக இடையே கடுமையான போட்டி நிலவுகிறது. காங்கிரசும் போட்டியில் உள்ளது.

வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற 44 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட இருக்கின்றனர்.

சுமார் 1.56 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

இந்த நிலையில் வாக்காளர்கள் பெருமளில் திரண்டு வாக்களிப்பதற்கு வசதியாக வாக்குப்பதிவு நடைபெறும் பெப்ரவரி 5-ஆம் திகதி அனைத்து அரசு மற்றும் தனியார் துறை அலுவலகங்களுக்கும் பொது விடுமுறை என டெல்லி அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## உத்தர பிரதேச சரக்கு ரயில்கள் மோதி விபத்து- போக்குவரத்து பாதிப்பு!

உத்தரபிரதேச மாநிலம் ஃபதேபூர் மாவட்டத்தில் காகா பகுதியில் உள்ள பாம்பிபூர் அருகே 2 சரக்கு ரயில்கள் மோதிக்கொண்டதால் சற்று நேரம் ரயில்வே சேவை பாதிப்படைந்தன.

சிக்னல் கோளாறு காரணமாக முதல் சரக்கு ரயில் தண்டவாளத்தில் நின்று கொண்டிருந்தபோது 2ஆவது சரக்கு ரயில் அதன் பின்னால் மோதி விபத்து ஏற்பட்டதாக முதற்கட்ட அறிக்கையில் தெரிய வந்துள்ளது.

இந்த விபத்து காரணமாக அப்லைன் தடை செய்யப்பட்டு ரயில்வே அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் காயமடைந்த இரண்டு ரயில்களின் மோட்டார்மேனும் சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்துக்கான காரணங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 237 பயணிகளுடன் வந்த சென்னை விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்!




சென்னை விமான நிலையத்துக்கு இன்று அதிகாலை 237 பயணிகளுடன் வந்துகொண்டிருந்த சர்வதேச விமானம் ஒன்றில் வெடிகுண்டு இருப்பதாக மர்ம நபரிடம் இருந்து தொலைப்பேசி அழைப்பு வந்தாக கூறப்படுகிறது.

இதையடுத்து விமானம் பத்திரமாகத் தரையிறக்கப்பட்டதும், தீவிர சோதனை நடத்தப்பட்டதில், விமானத்தில் வெடிபொருள்கள் எதுவுமில்லை என்பது உறுதி செய்யப்பட்டது.

பாதுகாப்பு காரணங்களுக்காக அந்த விமானத்தில் வந்திறங்கிய பயணிகளின் உடைமைகள் அனைத்தும் பரிசோதிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அச்சம் தேவையில்லை விழிப்புணர்வு அவசியம்!



உலகப் புற்றுநோய் தினம் சிறப்புப் பகிர்வு



உயிரைப் பறிக்கக்கூடிய கொடிய நோய்ப் பட்டியலில் முதலில் இருப்பது புற்றுநோயே. ஆனால், புற்றுநோய்க்கான அறிகுறிகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்தால், உரிய சிகிச்சை மேற்கொண்டு முழுமையாக குணமடையலாம். புற்றுநோய் குறித்த அச்சம் தேவையற்றது இது குறித்த விழிப்புணர்வுதான் மிகவும் அவசியமானது.

புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதற்காக 2000 ஆம் ஆண்டு உலக சுகாதார நிறுவனம் பெப்ரவரி 4 ஆம் திகதியை உலக புற்றுநோய் விழிப்புணர்வு தினமாக அறிவித்து, தொடர்ந்து விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இன்றையச் சூழலில் புற்றுநோய்க்கான சிகிச்சைகளும் மருந்துகளும் புதிது புதிதாக கண்டறியப்பட்டு வருகின்றன. ஆனாலும், உலகளாவிய ரீதியில் பல லட்சம் பேர் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர் உயிரிழக்கின்றனர்.

பொதுவாக, 30 முதல் 50 வயதுக்கு உட்பட்டவர்களே புற்றுநோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

### புற்றுநோய் வகைகள்:–

மார்பகப் புற்றுநோய்
நுரையீரல் புற்றுநோய்
ஆண்மைச் சுரப்பிப் புற்றுநோய்
தலை மற்றும் கழுத்துப் புற்றுநோய்
கர்ப்பப்பை புற்றுநோய்
கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்
கணைய புற்றுநோய்
லிம்போமா
லூக்கீமியா
வயிற்றுப் புற்றுநோய்
மல்டிப்பிள் மைலோமா
மூளைப் புற்றுநோய்
கடைப்பெருங்குடல் புற்றுநோய்.

இனி, புற்றுநோய்க்கான அறிகுறிகள், அதைத் தவிர்க்கப் பின்பற்றவேண்டிய சில விஷயங்களைப் பார்ப்போம்.

### பொதுவான அறிகுறிகள்

வாய், நுரையீரல், சிறுநீரகம், இரத்தம், தோல், மார்பகம் என உடலின் எந்த உறுப்பிலும் புற்றுநோய் உண்டாகலாம். நோய் வரும் உறுப்பைப் பொறுத்து, அவற்றின் அறிகுறிகள் மாறுபடும். பொதுவாக,

மூச்சுவிடுவதில் சிரமம்.
இரத்தம் கலந்து சளி வருவது.



நீண்ட நாட்களாக தொடர் இருமல் இருப்பது.
செரிமானம் தாமதமாவது.
புண் அல்லது அல்சர் குணமாகாமல் இருப்பது.
உணவு விழுங்குவதில் சிரமம்.
அதீதப் பசி, சோர்வு, கவலை மற்றும் அதிக அளவுக்கு எடை குறைவது ஆகியவை புற்றுநோய்க்கான அறிகுறிகள்.


மேலே காணும் அறிகுறிகள் தென்பட்டால் உடனே மருத்துவரை அணுகி உடல் பரிசோதனை செய்து கொ-



ள்ள வேண்டும். மாதம் ஒரு முறை உடல் எடையைப் பரிசோதித்து , உடலைச் சீராகப் பராமரிக்க வேண்டியது அவசியம்.

40 வயதுக்கு மேல் உள்ளவர்கள், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மருத்துவரின் ஆலோசனைப்படி உடல் பரிசோதனை செய்துகொள்ளலாம். உலக அளவில் புற்றுநோய் பாதிப்புகளைக் குறைக்க, ஒவ்வொரு தனிமனிதனும் தன்னால் முடிந்ததைச் செய்ய வேண்டும். புற்றுநோயைப் பொரறுத்தவரை நோயாளியின் தன்மை, நோயின் தீவிரத்தைப் பொருத்து பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. பாரம்பரியமாக வரும் புற்றுநோயைத் தவிர்க்க முடியாது என்றாலும், சரியான உணவுப் பழக்கம், உடற்பயிற்சி உள்ளிட்டவை மூலம் இந்நோயைத் தவிர்க்கலாம். துரிதஉணவு, அதிக வண்ணம் சேர்க்கப்பட்ட உணவு, பல நாட்கள் பாதுகாத்து வைக்கப்பட்ட உணவு, கொழுப்பு மிகுந்த உணவு, புகையிலை, புகைப்பழக்கம், மது அருந்துதல் ஆகியவற்றைத் தவிர்க்கவேண்டும். மிதமான உடற்பயிற்சியாவது மேற்கொள்ள வேண்டும்.

படித்தவர்களிடம்கூட போதிய விழிப்புணர்வு இல்லாத நிலையில், பாமர மக்களின் நிலை? எனவே, அரசு, மருத்துவமனைகள், தன்னார்வ அமைப்புகள் என சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் இணைந்து, புற்றுநோய் விழிப்புணர்வை ஓர் இயக்கமாக கொண்டுசெல்ல வேண்டும் என இன்றைய தினத்தில் நாமும் உறுதி எடுப்போம்.







# கிரீசில் நிலநடுக்கம்!

ஐரோப்பிய நாடான கிரீசில் சாண்டோரினி தீவில் கடலுக்கு அடியில் கடந்த 3 நாட்களில் 200-க்கும் மேற்பட்ட முறை நிலநடுக்கங்கள் பதிவாகின.

இதனை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டதால் மக்கள் அச்சம் அடைந்தனர். எனவே அங்கு வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற அறிவுறுத்தப்பட்டது.

இதற்கிடையே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சாண்டோரினி தீவில் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

இதனையடுத்து நிலநடுக்கத்தால் ஏற்படும் ஆபத்தை குறைக்க மக்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# பிரான்சில் முதியோர் காப்பகத்தில் தீப்பரவல் – மூன்று பேர் உயிரிழப்பு!

பிரான்ஸ் தலைநகர் பாரீசில் உள்ள முதியோர் காப்பகம் ஒன்றில் ஏற்பட்ட தீப்பரவல் காரணமாக மூன்று பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்த காப்பகத்தில் சுமார் 75-க்கும் மேற்பட்ட முதியவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்ற நிலையில் அங்குள்ள சலவை அறையில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் குறித்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

தீ வேகமாக பரவியதைத் தொடர்ந்து அங்கிருந்தவர்கள் வெளியேறினர். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் சில மணி நேர போராட்டத்துக்கு பிறகு தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இருப்பினும் குறித்த தீ விபத்தில் 3 முதியவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த 9 பேர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



## கனடா, மெக்சிகோ மீதான வரி விதிப்பு ஒரு மாதத்திற்கு இடைநிறுத்தம்!



கனடா, மெக்சிகோ மீதான வரி விதிப்பை ஒரு மாதத்திற்கு ஒத்திவைப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

முன்னதாக கனடா மற்றும் மெக்சிகா பொருட்களுக்கு வரி விதிக்கும் நடைமுறையை ஒருமாதத்திற்கு நிறுத்துவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தைக்கு பிறகு இந்த அறிவிப்பு வெளியாகி இருக்கிறது.

இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராக பொறுப்பேற்றதும் மெக்சிகோ, கனடா மற்றும் சீன பொருட்களுக்கு அதிக வரி விதிக்கும் நடைமுறையை டொனால்டு டிரம்ப் அறிவித்தார். இவரது அறிவிப்பு உலகளவில் வர்த்தக போர் ஏற்படும் அச்சத்தை ஏற்படுத்தியது .

இந்த நிலையில், மெக்சிகோ பிரதிநிதி கிளாடியா ஷீன்பாம் உடன் அமெரிக்கா நேற்று பேச்சுவார்த்தை நடத்தியது.

அதில் அமெரிக்க - மெக்சிகோ எல்லைக்கு 10 ஆயிரம் துருப்புகளை அனுப்புவதாக மெக்சிகோ ஒப்புக்கொண்டது. இதைத் தொடர்ந்து தான் வரி விதிக்கும் நடைமுறையை ஒருமாத காலத்திற்கு நிறுத்தி வைப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்தார். இதே போல் கனடாவும் வரி விதிப்பை ஒத்திவைக்கும் ஒப்பந்தத்திற்கு சம்மதம் தெரிவித்தது.

மிகவும் நட்புரீதியான உரையாடலுக்கு பிறகு எதிர்பார்க்கப்பட்ட வரிகளை ஒரு மாத காலத்திற்கு உடனடியாக இடைநிறுத்த ஒப்புக்கொண்டதாக அதிபர் டிரம்ப் தனது ட்ரூத் எனும் சமூக வலைதள பதிவில் தெரிவித்தார்.

தற்போதைக்கு ஒரு மாத காலத்திற்கு வரி விதிப்பு நிறுத்தப்பட்டுள்ள நிலையில், அமெரிக்கா மற்றும் மெக்சிகோ இடையில் ஒப்பந்தம் எட்டுவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

“எங்கள் உறவு மற்றும் இறையாண்மைக்கு மிகுந்த மரியாதையுடன் அதிபர் டிரம்புடன் நல்ல உரையாடல்” என்று ஷீன்பாம் கூறினார்.

## அயர்லாந்தில் கார் விபத்து: இந்தியர்கள் இருவர் உயிரிழப்பு!




அயர்லாந்தில் கார் விபத்தில் சிக்கி இந்தியர்கள் இருவர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அயர்லாந்தில் உள்ள கவுண்டி கார்லோ நகரில் வசித்து வந்தவர்கள் செருகுரி சுரேஷ் சவுத்ரி, பார்க்லகவ் சிந்தூரி. இந்தியாவை சேர்ந்த இருவரும் அயர்லாந்தில் உள்ள ஒரு தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தில் படித்து வந்தனர். தனது நண்பர்கள் 2 பேருடன் இவர்கள் கார்லோ நகரில் வாடகை வீட்டில் தங்கி படித்து வந்தனர்.

சம்பவத்தன்று நண்பர்கள் 4 பேரும் காரில் மவுன்ட் லெய்ன்ஸ்டர் பகுதியில் இருந்து கார்லோ நகருக்கு சென்று கொண்டிருந்தனர். அப்போது கட்டுப்பாட்டை இழந்த கார் சாலையோரம் இருந்த மரத்தில் மோதியதால் குறித்த விபத்து இடம்பெறுள்ளது.

இந்த விபத்தில் செருகுரி சுரேஷ் சவுத்ரி மற்றும் பார்கவ் சிந்தூரி ஆகியோர் சம்பவ இடத்திலேயே இறந்ததோடு மற்ற இருவரும் படுகாயம் அடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## கிளிநொச்சியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


















இந்தப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், அரசியல் கைதிகளின் உறவுகள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், வர்த்தகர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பின்வரும் விடயங்களைக் கோரிக்கைகளாக முன்வைத்தனர்.

1. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு சர்வதேச நீதி வேண்டும்.

2. தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

3. பௌத்த மயமாக்கல் உடனே நிறுதத்தப்பட வேண்டும்.

4. தமிழர் தாயக பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடந்து வரும் நில அபகரிப்பு உடனே நிறுத்தப்பட வேண்டும்.

5. தாயக வளத்தை அபகரிப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

6. தமிழர் தாயக பிரதேசத்தில் இருந்து இராணுவம் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும்.

7. தமிழின படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணை வேண்டும்

8. சிவில் செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்துதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

9. ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவது நிறுத்தப்பட வேண்டும்.

10 எமது நிலம் எமக்கு வேண்டும்.

11. தாயகம், தேசியம், அரசியல் சுயநிரணயம் என்பன எமது உரிமைகள். அவற்றை உடனே அங்கீகரிக்க வேண்டும்.

12. வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும்.

13 சர்வதேசம் வட்டுக்கோட்டை தீர்மானத்தை அங்கீகரிக்க வேண்டும்.

14 எமது தலைவிதியை நாமே தீர்மானிக்க சர்வதேச நியமங்களுக்கு அமைய எமது தாயக பிரதேசத்தில் பொது வாக்கெடுப்பு நடத்துமாறு சர்வதேசத்தைக் கோருகின்றோம்

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)








சுதந்திர தினத்தைக் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக பிரதான வாயிலின் முன்பாக இன்று முற்பகல் 11 மணியளவில் அவர்கள் போராடடத்தில் ஈடுபட்டனர்.

## திலீபனின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூபிக்கு முன்பாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் சிவகுரு ஆதீனத்தில் ஆதீன குரு முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

## சுதந்திர தினத்தை முன்னிட்டு

# வவுனியா சிறையில் இருந்து இன்று இரண்டு பேர் விடுதலை



வவுனியா, பெப் 04

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவர் விடுவிக்கப்பட்டனர்.

77 ஆவது சுதந்திர தினத்தையடுத்து ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நாடு பூராகவும் சிறைக்கைதிகள் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களுக்காகக் குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்கள் செலுத்த வேண்டிய அப ராதங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது டன், சிறு குற்றங்களுக்காகக் கைதாகி தண்டனையின் பாதியை நிறைவு செய்த கைதிகளுமே இவ்வாறு பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்கப்படடுள்ளனர்.

அதன்படி வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து இரண்டு கைதி கள் விடுவிக்கப்பட்டனர். கைதிகளை விடுவிக்கும் நிகழ்வில் வவுனியா சிறைச் சாலை அத்தியட்சகர் ரங்கன பெரேரா, பிரதான சிறைச்சாலை பிரதானி உட்பட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.

# சுதந்திரத்தின் கனவை ஒன்றாக நனவாக்கிகொள்வோம்

## கொழும்பு நிகழ்வில் ஜனாதிபதி உரை



கொழும்பு, பெப் 04

“சுதந்திரத்தின் கனவை ஒன்றாகக் காண் போம். அந்தக் கனவை ஒன்றாக நனவாக்கக்கிக் கொள்வோம்.” - என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற இலங்கை யின் 77 ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆற்றிய முழுமையான உரை வருமாறு:-

“இம்முறை நாம் சிறப்பான சுதந்திர தினத்தை கொண்டாடுகிறோம். கடந்த காலத்தை பார்த்து சுதந்திர தினத்தை கொண்டாடாமல், இம்முறை எதிர்காலத்தை நோக்கியதாகவும், வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் நாட்டின் மத்தியிலும் வாழும் மக்கள் எதிர்கால வளமான இலங்கை நாடு, நவீன இலங்கை தேசம் ஒன்றிற்காக கனவு காணும் தருணத்திலேயே நாம் இன்று சுதந்திரத்தை கொண்டாடுகிறோம். 1948 பெப்ரவரி 4 நமக்கான முடிவுகளை நாமே எடுப்பதற்கான அரசியல் சுதந்திரம் நம் நாட்டுக்கு கிடைத்தது. அந்த சுதந்திரம் வரையறுக்கப்பட்டதாக இருந்தாலும், அது முக்கியமானது. அதுவே நமது அரசியல் சுயாதீன தன்மையை பெற்ற வரலாற்றின் முதல் தருணம். 1505 முதல் பகுதியளவில் மேற்கத்தேய ஏகாதிபத்தியவாதிகளுக்கு அடிபணிந்த இந்த நாடு 1815 இல் பிரித்தானிய ஏகாதி பத்தியத்திற்கு முழுமையாக அடிபணிந்தது. அதிலிருந்து விடுபட்டு இன்றைக்கு 77 ஆண்டுகளுக்கு முன்பு இந்து சமுத்திரத்தினால் சூழப்பட்ட இந்நாடு, சுயாதீனமான நாடாக எழுந்து நிற்பதற்குத் தேவையான அரசியல் நியதிகளை நிறைவேற்ற ஆரம்பித்ததும் இவ்வாறானதொரு நாளிலாகும். எனவே இது நாம் கொண்டாட வேண்டிய நாளாகும்.

இந்நாளை நனவாக்க தம் உயிர் தியாகம் செய்த அனைத்து வீரர்களுக்கும் அஞ்சலி செலுத்தும் நாள் இன்று. சுதந்திரத்தை முழுமையாகப் பெறுவதற்காக 1948ஆம் ஆண்டுக்குப் பின்பும் வீரமிக்க மக்கள் நமது சுதந்திரத்துக்காக மேடுபள்ளம் நிறைந்த பாதையில் பயணித்தனர்.

கிரீடத்திடமிருந்து முழு அரசியல் சுதந்திரம் பெற்ற 1972 ஆம் ஆண்டை கடந்து தொடர்ச்சியாக 77ஆவது சுதந்திரத்தை கொண்டாடும் இந்தத் தருணம் வரையில் நீண்ட பயணமாக வந்திருக்கிறோம். அந்தப் பயணத்தில்,நாம் அறியாத, நமது சுதந்திரத்துக்காக உயிர் தியாகம் செய்த வீரர்களின் இரத்தத்தினாலும், வியர்வையினாலும் இன்று வரை பயணித்திருக்கிறோம். அவர்கள் அனைவருக்கும் இந்த தருணத்தில் நமது கௌரவம் உரித்தாகும்.

இன்று, இந்த நாட்டில் மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியாக, இந்த சுதந்திர சதுக்கத்தில் இந்த பெருமைமிக்க தேசியக் கொடியின் முன், சுதந்திரத்தின் எதிர்கால எதிர்பார்ப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வரலாற்றுச் சுமையைத் ஏற்றுக்கொண்ட உங்கள் சகோதரனாக நான் நிற்கிறேன். என்னைப் போன்றே இந்த சுமையை தாங்கிக்கொண்டு இந்த நேரத்தில் நீங்களும் என்னுடனும் என்னைச் சுற்றியும் நிற்கிறீர்கள் என்று நம்புகிறேன். நமது பொருளாதார சுதந்திரத்திற்காக, நமது சமூக, கலாசார சுதந்திரத்திற்காக, சுருக்கமாகக் கூறினால்,

நவீன பிரஜைகளாக இந்த நாட்டில் பெருமையுடன் வாழத் தேவையான சுதந்திரத்தை உருவாக்குவதற்காக நாம் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும்.

நீண்ட காலமாக காலனித்துவத்துக்கு அடிபணிந்தவர்களாக எம்மை பிரித்து ஆண்ட இன வேறுபாடுகள், மத வேறுபாடுகள், ஜாதி வேறுபாடுகள் மட்டுமன்றி, அரசியல் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் இடையே, நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஊழியர்களிடையே, பயணிகள் மற்றும் பொதுப் போக்குவரத்து நடத்துபவர்களிடையே, அரச ஊழியர்கள் மற்றும் தங்கள் தேவைகளை நிறை வேற்ற வருபவர்களிடையே, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே வேரூன்றியிருக்கும் தவறான எண்ணங்களை கழுவி அகற்றி இந்த சமூகத்தை தூய்மைப்படுத்தப்பட வேண்டும். அதேபோல், நவீன உலகத்திற்கான மனித மாண்பு, அன்பு, கருணை என்பவற்றை மனித தொடர்பாடலின் அடிப்படை என்பதை நமக்கு நாமே வலியுறுத்த வேண்டும்.

மேலும், இந்த நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் ஒருவருக்குக் கிடைக்கும் கௌரவம் மற்றும் அன்பு என்பன அங்கவீனம், முதுமை, நோய் அல்லது அத்தகைய எந்தவொரு இயலாமை காரணமாகவும் மட்டுப்படுதற்கு இடமளிக்கக்கூடாது. அப்போது மட்டுமே, காலனித்துவ யுகத்திலிருந்து விடுபட்டு 77 ஆண்டுகள் கடந்துவிட்ட ஒரு நாடு என்ற வகையில், சுதந்திரம் குறித்து புதிதாக சிந்திக்க முடியும்.

இதன் காரணமாக நாங்கள் அனைவரும் நாட்டிற்கான முழுமையான பொருளாதார, சமூக மற்றும் கலாசார சுதந்திரத்தை வென்றெடுக்கும் போராட்டகளத்தின் போராட்டக்காரர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த தாய்நாட்டிற்காக நாம் அனைவரும் ஒற்றுமையாக சுதந்திரப் போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இந்த பணியில், நம் தேசத்திற்கு உணவை உற பத்தி செய்யும் விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் பங்குள்ளது. நமது தேசத்திற்கான அறிவை உருவாக்கி எதிர்கால சந்ததியினரை அறிவினால் பூரணப்படுத்தும் ஆசிரியர்களின் வகிபாகமும் உள்ளது. நமது தேசத்தின் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் சுகாதாரப் பணியாளர்களாக உங்களுக்கும் பங்கு உள்ளது. நமது பொது மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொலிஸ்மற்றும் பாதுகாப்புப் படைகள் என்ற வகையில் உங்களுக்கும் பங்குள்ளது.

நம் நாட்டில் வலுவான உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்கும், நம் நாட்டை தொழில்மயமாக்கலை நோக்கி இட்டுச் செல்லும், நம் நாட்டின் சேவைப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் இந்த அனைவருக்கும் முக்கியமான வகிபாகம் உள்ளது. ஆடைத் தொழிற்சாலை தொழிலா ளர்கள் முதல் மலையகத்தில் தேயிலை பறிக்கும் பெண் கள் வரையிலும், தொலைதூர நாடுகளில் நமக்காக பாடுபடுவோர் வரையிலும், தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் நம் நாட்டை உயர்த்த பாடுபடும், சுற்றுலாத் துறையின் மூலம் நம் நாட்டை உயர்த்த பாடுபடும் உங்கள் அனைவருக்கும் அதில் வகிபாகமொன்று உண்டு.

உலகப் பொருளாதார அமைப்பில் நலிவடையாமல், அதன் ஒவ்வொரு அசைவிலும் நசுக்கப்படும் அடி பணிந்தவர்களாக அன்றி, பொருளாதாரத்துக்குள் நமது சுதந்திரத்தை அடைய வேண்டுமெனில் அனைவரும் ஒன்றுபட்டு இந்த தாய்நாட்டிற்காக அர்ப்பணிக்க வேண்டியுள்ளது. அந்த பொருளாதார சுதந்திரத்திற்கான நமது போராட்டத்தில் நமது சமூக மற்றும் கலாசார சுதந்திரத்தை ஒருபோதும் நாம் இரண்டாம் பட்சமாக பார்க்க நாம் தயாரில்லை.

எனவே, கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் கல்வியியளர்கள் என்ற வகையில் வெறுப்பு மற்றும் கோபத்தால் மாசுபடுத்தப்பட்ட எமது தேசத்தின் உயிர்ப்பை தூய்மைப்படுத்தி குணப்படுத்த வேண்டிய தவிர்க்க முடியாத பொறுப்பு உங்களுக்கு உள்ளது. அதில் மதத் தலைவர்களுக்கு பாரிய பொறுப்புள்ளது. மேலும், இந்த நாட்டின் வருங்கால சந்ததியினரை வளர்த்தெடுக்கும் அன்பான தாய்மார் அன்பான தந்தையர் என்ற வகையில் உங்களுக்கு சிறப்பான பணி உண்டு.

மேலும், நாளை இந்த நாட்டைக் பொறுப்பேற்கத் தயாராகும் கல்வி பயிலும் பிள்ளைகள் என்ற வகையில் உங்களுக்கும் தனித்துவமான பங்கு உள்ளது. இதை நாட்டை அதிகமாக நேசிக்கும் மக்களின் உயிர் தியாகம், வியர்வை, இரத்தம் கண்ணீரால் இந்த நாட்டை எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லும் பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது போன்று எதிர்காலத்தில் அந்த கௌரவப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைப்போம்.





ஆனால் இன்று, 2025 பெப்ரவரி 4 ஆம் திகதி 77 ஆண்டுகளுக்குப் பிறகு காலனித்துவத்திலிருந்து சுதந்திரம் பெற்று தேசிய சுதந்திரத்தை கொண்டாடும் உங்களுக்கு நான் ஒன்றை உறுதியளிக்க வேண்டும். நாங்கள் உங்களிடம் ஒப்படைக்கப் போகும் நாடு வரலாற்றால் எங்களிடம் ஒப்படைக்கப்பட்ட நாடாக அன்றி, நீங்கள் உலக பிரஜையாக வாழ விரும்பும், பிரஜை என்ற உங்கள் கௌரவத்தை மதிப்பளிக்கும், மேம்பட்ட கலாசாரத்துடன் கூடிய ஒரு நாடாக அமையும். மேலும், மனித நாகரிகம் இதுவரை அடைந்துள்ள அறிவியல், தொழில்நுட்ப மற்றும் அறிவுசார் சாதனைகள், இந்த இலங்கை நாட்டுப் பிரஜையாக அனுபவிப்பதற்கான உங்களது உரிமையை உறுதிப்படுத்தும் நாடாக அமையும்.

சரித்திரம் நமக்கு வழங்கியிருக்கும் இந்த மாபெரும் வாய்ப்பை நழுவ விட எமக்கு எந்தத் தார்மீக உரிமையும் இல்லை என்பதை இன்று உங்கள் முன் உறுதியாகச் இவ்வாறு சொல்கிறேன். நாம் அவ்வாறு செய்யவில்லை என்பதற்கு எதிர்காலம் சாட்சியமளிக்கும். மேலும், நாங்கள் உங்களிடம் ஒப்படைக்கும் இந்த அன்பான தாய்நாட்டை நீங்கள் எங்களை விட அதிக அன்புடனும் ஆற்றலுடனும் எதிர்காலத்திற்கு எடுத்துச் செல்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த பூமியில் பிறந்த மனிதர்கள் என்ற வகையில், இந்த உலகத்தை உயர்ந்த மனித நேயம் மிக்க இடமாக மாற்றும் பொறுப்பு நமக்கு உள்ளது. அந்த உயர்ந்த மனித நேயத்தை அனைத்து மக்களும் சமமாக உள் வாங்குவதற்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும். சுதந்தி ரத்திற்கான போராட்டம் இந்த பரந்த நோக் கங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, சுதந்திரத்தின் கனவை ஒன்றாகப் காண்போம். அந்தக் கனவை ஒன்றாக நனவாக்கிகொள்வோம்.

ஒருவேளை நீங்களும் நானும், நாம் அனைவரும் இணைந்து பயணித்துக் கொண்டிருக்கும்,சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் தொடர்பிலான நவீன உலக அரசியலில் அழியாத முன்னுதாரணமாக நமது தாய்நாட்டை, இந்த இலங்கை நாட்டை மாற்றியமைப்பதற்கான பயணமாக இருக்கலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் இந்த உலகின் செல்வந்த நாடாக மாற முடியாது என்றாலும், நாம் முயற்சி செய்தால் இந்த உலகத்தில் வளமான தேசிய உயிர்ப்பை தாங்கிக்கொண்டிருக்கும் சமத்துவம் மற்றும் சுதந்திரத்திற்கான முன்னுதாரணமான நாடாக நாம் மாறலாம்.” - என்றார்.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.02.2025 இல் வெளியிடப்பெற்றது.